**மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், “50,000—க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வரவிருக்கிறார்கள்” என்று கூறினார்கள். எத்தனை தொழிலாளர்கள் இருந்தாலும், 50,000 தொழிலாளர்கள் ஈட்டுறுதித் திட்டத்தில் பதிவு செய்திருந்தால்தான், ஈட்டுறுதி மருத்துவமனை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஒரு norms இருக்கின்றது. மேலும், தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து ஈட்டுறுதி மருந்தகங்களும், மருத்துவமனைகளும் ESI கழகத்தின்கீழ் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த ESI கழகம் மத்திய அரசாங்கத்திற்குட்பட்டதாகும். ஆதலால், மத்திய அரசு எந்த norms—யை வைத்திருக்கின்றதோ, அந்த norms—ன்படிதான், ஈட்டுறுதி மருந்தகங்களும், மருத்துவமனைகளும் செயல்படும். மத்திய அரசின் norms—ன்படிதான், ஈட்டுறுதி மருந்தகம் அல்லது மருத்துவமனை அமைக்க இயலும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடிய விரைவில், அந்த norms மாறினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

**[குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 2. தகவல் கோரல்

### மேகதாதுவில் கர்நாடக அரசு தடுப்பணை கட்டுவது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு பிரச்சினையை, அவசரப் பொது*

2016 ஆகஸ்ட் 17] [திரு. துரைமுருகன்]

முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். சமீபத்தில், சுதந்திர தின விழாவில் பேசிய மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா அவர்கள், "மேகதாதுவில் புதிய தடுப்பணை கட்டப்படும் என்றும், சுமார் 5,912 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தத் திட்டம் உருவாக்கப்படும் என்றும், அதற்கான திட்ட வரைபடம் தயாரிக்க உலகளாவிய global tender கோரப்படும் என்றும், அவ்வாறு கட்டப்படும் அணையிலிருந்து 400 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கப்படும்" என்றும் அறிவித்ததை அறிந்து, நான் மட்டுமல்ல, நீங்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலுள்ள அத்தனை பேரும் கவலை கொண்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே, காவேரி பிரச்சினை இன்னும் முற்றுப்பெறவில்லை. கர்நாடகா நமக்குத் தர வேண்டிய தண்ணீரை தராத காரணத்தால், இன்னும் காவேரி டெல்டா விவசாயிகள் தங்களுடைய சம்பா, குறுவை, தாளடி போன்ற பயிர்களை முழுமையாகப் பயிரிட முடியாமல் இருந்து கொண்டிருக்கின்றார்கள். அதிலே, மேலும் ஓர் இடி விழுவதைப் போல, கர்நாடக அரசு, "நாங்கள் மேகதாதுவில் அணை கட்டுவோம்" என்று சொல்வது, நமக்கு மிகப் பெரிய பயத்தை உருவாக்குகிறது. அதுமட்டுமல்ல, கடந்த நவம்பர் மாதம், கர்நாடக மாநிலத்தின் நீர்வளத் துறை அமைச்சர், எம்.பி. பட்டீல் அவர்கள் பேசியபோதும், "மேகதாதுவில் 48 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட அணை கட்டப்படும் என்றும், கபினி, ஹேரங்கி, கிருஷ்ணராஜ சாகர், ஹேமாவதி அணைக்கட்டுகளுக்குக் கீழே, மீண்டும் தடுப்பணைகள் கட்டப்படும் என்றும், தண்ணீர் கேட்பதற்கு தமிழ்நாட்டுக்கு உரிமை இல்லை" என்றும் கூறியிருக்கிறார். ஒரு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதைக்கூட நான் அவ்வளவு பொருட்படுத்த மாட்டேன் என்றாலும்கூட, மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு. சித்தராமையா அவர்களும் பேசியிருப்பது பெருத்த கவலையை உருவாக்கியிருக்கிறது. நான் திரு. சித்தராமையா அவர்களை. . .

*முற்பகல் 10—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சுருக்கமாகச் சொல்லுங்கள். Matter ஏற்கெனவே எல்லோருக்கும் தெரியும், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பிரச்சினை பெரிது. திரு. சித்தராமையா அவர்களை நான் நீண்ட நாட்களாக அறிவேன். அந்தக் காலத்திலே

[திரு. துரைமுருகன்] [2016 ஆகஸ்ட் 17

காவேரி பிரச்சினையைப் பற்றிப் பேசுகின்றபோதெல்லாம் அவர் எங்களோடு வந்து பேசியிருக்கிறார்கள். கொஞ்சம் சாந்த சுபாவம் உடையவர். அவரே இப்படிப் பேசியிருக்கிறார் என்றால், விஷயம் தலைக்கு மேலே போகிறது என்று பொருள். எனவே, இதை நாம் இத்தோடு விட்டுவிடக்கூடாது. ஒரு சுதந்திர தினத்தில் கொடியை ஏற்றி வைத்து, இந்தச் சூளுரையை அவர் எடுத்திருக்கிறார் என்றால், கர்நாடக அரசு இதிலே உறுதியாக இருக்கிறது என்று பொருள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகச் சொல்கிறேன். எனவே, நான் கேட்டுக்கொள்வது, இந்தப் பிரச்சினை குறித்து இந்த அவை நடவடிக்கைகளை ஒத்திவைத்து, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துகளையும் கேட்கவேண்டுமென்பது ஒன்று.

இரண்டாவது, இது தமிழ்நாட்டைப் பாதிக்கக்கூடிய பிரச்சினை. நமக்குள் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம்.

‘ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில் அன்னியர் வந்து புகல் என்ன நீதி ?’

என்று கேட்டானே பாரதி. அப்படி நமக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், காவேரிப் பிரச்சினையில், நாம் அத்தனை பேரும், எல்லாக் கட்சிகளும் ஒன்று திரண்டிருக்கிறோம் என்பதைக் காட்ட வேண்டும். எப்படி கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆளும் கட்சியாக இருந்தாலும், பி.ஜே.பி. அந்தக் கட்சியோடு இணைந்து, இரண்டு பேருமே காவேரி பிரச்சினையில் ஒன்றாகப் போகிறார்களோ அந்தப் பரந்த உள்ளம் இங்கே உள்ள எல்லாக் கட்சிகளுக்கும் வந்தாக வேண்டும். எனவே, அருள்கூர்ந்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில், ஒரு சர்வகட்சிக் கூட்டத்தை இந்த அரசாங்கம் உடனே கூட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

மூன்றாவதாக, இந்த மாமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரலாம். காரணம், இப்படியொரு திட்டத்தை அறிவித்த கர்நாடக அரசைக் கண்டிப்பதோடு, மத்திய அரசைப் பார்த்து வற்புறுத்தி, இதில் நீங்கள் உடனடியாகத் தலையிட்டு, ஆவன செய்யாவிட்டால், இது பெரிய பிரச்சினையாகிவிடும், காவேரி என்பது இரு

2016 ஆகஸ்ட் 17] [திரு. துரைமுருகன்]

மாநிலத்திற்குள்ளே ஓடுகின்ற நதிப் பிரச்சினை மட்டுமல்ல. இரு மாநிலத்திலே வாழ்கின்ற கன்னடியர்கள் மற்றும் தமிழர்களுடைய பிரச்சினையை உள்ளடக்கியிருக்கிறது என்பதையும் மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டும்.

நான்காவதாக நான் சொல்வது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலேயே, எப்படி கர்நாடகத்தில் எல்லாக் கட்சிக்காரர்களையும் அழைத்துக்கொண்டு போகிறார்களோ, அதேபோல், ஒரு delegation செல்ல வேண்டும் அல்லது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலோ அல்லது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையிலோ புது டெல்லிக்குச் சென்று, பிரதமரிடத்திலே நாமும் நம்முடைய பிரச்சினையை வற்புறுத்த வேண்டுமென்ற நான்கு ஆலோசனைகளையும் முன்வைத்து அரசு இதிலே வேகமாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியின் குறுக்கே அணை கட்டுவதாக கர்நாடக முதலமைச்சரே அறிவித்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, இது தலைக்கு மேலே சென்றிருக்கக்கூடிய பிரச்சினை. இதிலே நமது அரசு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தமட்டில், காவேரி நீர்ப் பிரச்சினை என்பது மிக மிக முக்கியமான பிரச்சினை. இதிலே நாம் காலம் தாழ்த்தாமல், தடுப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

அதேபோல, பாலாற்றின் குறுக்கேயும் இப்போது அணையினுடைய உயரத்தை அதிகப்படுத்திவிட்டார்கள். இனிமேல் அதை உடைப்பதற்கு என்ன வழி என்றுதான் பார்க்கவேண்டும். அதேபோல, இந்த அணையைக் கட்டிய பிறகு நாம் நீதிமன்றத்திற்கோ அல்லது மற்ற வழிகளிலோ சென்று போராடுவதைவிட, வேறு வழிகளிலே அதற்குரிய நடவடிக்கையை இப்போதே இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நாங்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

[2016 ஆகஸ்ட் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், காவேரி நதி நீர்ப் பிரச்சினை குறித்தும், தமிழக மக்களுடைய ஒட்டுமொத்த உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய வகையிலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தலைமையிலேயே ஒட்டுமொத்தமான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டுமென்று சொன்னார்கள். எனவே, மேலும் நாம் காலம் தாழ்த்தாமல், அவசர அவசியத்தைக் கருத்தில் கொண்டு, ஒருமித்த முறையிலே, இந்த அவையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, நமது மக்களுடைய ஜீவாதாரப் பிரச்சினையைக் காப்பாற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை நான் சார்ந்திருக்கக்கூடிய இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக வலியுறுத்தி தங்கள் வாயிலாக தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் மற்றும் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களும் மேகதாதுவிலே அணை கட்டுவது பற்றி இங்கே பேசியிருக்கின்றார்கள், தங்களுடைய கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்த நடவடிக்கையைப் பற்றி இந்த நேரத்திலே தெளிவாகக் குறிப்பிட விரும்புகின்றேன். கர்நாடக அரசு மேகதாது எனுமிடத்தில் புதிதாக இரண்டு அணைகள் கட்ட உள்ளதாகவும், இதற்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கையைத் தயார் செய்ய தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விருப்பம் கோரும் அறிவிப்பை,* Expression of Interest *கோரியுள்ளது எனவும், 12–11–2014 அன்று* Times of India *பத்திரிகையில் செய்திகள் வந்ததையடுத்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி*

2016 ஆகஸ்ட் 17] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 12–11–2014 அன்று எழுதிய கடிதத்தில் இப்பிரச்சினையில் தலையிட்டு, கர்நாடக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கையை நிறுத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. இதேபோன்று, கர்நாடக அரசுக்கு 12–11–2014 அன்றும், மத்திய நீர் ஆதாரத் துறை அமைச்சகத்திற்கு 13–11–2014 அன்றும் கடிதங்கள் அனுப்பப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு ஒன்று 18–11–2014 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இப்பொருள் குறித்து 5–12–2014 அன்று ஒரு தீர்மானம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 12–12–2014 ஆம் நாளிட்ட நேர்முகக் கடிதத்தின் வாயிலாக மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு அனுப்பப்பட்டது. மீண்டும் மற்றொரு கடிதம் 21–03–2015 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பி, வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பாக 26–3–2015 அன்று கூடுதல் மனு ஒன்றை Additional Affidavit, உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ளது.

மீண்டும் இதுகுறித்து 27–3–2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 27–3–2015 நாளிட்ட கடிதத்தின்வாயிலாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பி, உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், 28–3–2015 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரிலே சந்தித்து, தமிழ்நாடு சட்டமன்றம் 27–3–2015 அன்று ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தை வழங்கி, உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுகோள் விடுத்தனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 25–4–2015 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரிலே சந்தித்து, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் நேரில் தலையிட்டு கர்நாடகத்தின் திட்டத்திற்கு காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரை ஒப்புதல் அளிக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் 7–8–2015

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2016 ஆகஸ்ட் 17 அன்று அளித்த கோரிக்கை மனுவில், Memorandum, இப்பொருள் குறித்து மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

மத்திய நீர்வளம், ஆற்று மேம்பாடு மற்றும் கங்கை உயிர்ப்பித்தல் துறை அமைச்சரிடமிருந்து 8–1–2016 அன்று பெறப்பட்ட கடிதத்தில், இத்திட்டம் குறித்த அறிக்கையினை பிற காவேரி வடிநில மாநிலங்களுடன் பகிர்ந்து கொண்டு அவற்றின் இசைவினைப் பெறுமாறு கர்நாடக அரசை வலியுறுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

8–3–2016 அன்று கர்நாடக அரசு தமிழகத்திற்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்தில் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள தமிழக அரசின் மனு எண் 10/2008–ல் உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்காமல் மேகதாதுவில் அணை கட்டுவது பற்றிய எண்ணம் ஏதும் இல்லை என்று மீண்டும் தெரிவித்துள்ளது. இதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்த நடவடிக்கை என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். எவ்வாறு இருப்பினும், இத்திட்டம் தொடர்பான மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இம்மனுக்கள் காவேரி சிவில் வழக்குகளுடன் விரைவில் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், 15–8–2016 அன்று கர்நாடக அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேகதாதுவில் காவேரியின் குறுக்கே அணை கட்ட ரூ.5,912 கோடியில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் குடிநீர் வழங்கவும், 400 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கவும் உள்ளதாக ஊடகங்கள் வாயிலாகத் தெரியவந்துள்ளது.

தமிழக விவசாயிகளின் நலனுக்கு எதிராகவும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மீறும் வகையிலும், தமிழ்நாடு அரசின் இசைவு பெறாமலும் கர்நாடக அரசு காவேரி ஆற்றின் குறுக்கே எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்த உத்தேசிக்குமானால், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட, சட்டபூர்வமான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

2016 ஆகஸ்ட் 17]

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இதற்குமேல் விவாதம் ஒன்றும் இல்லை, எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. நீங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நான் சொல்வதைக் கேளுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சு. புகழேந்தி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) முழு விவரமும் எல்லோருக்கும் தெரியும், நீங்கள் உட்காருங்கள். தகவல் கோரல் என்கிற முறையில்தான், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் என்னுடைய அறையில் வந்து கேட்டீர்கள், நாங்கள் இதுபோன்று* raise *செய்கிறோம்,* zero hour*–ல்* raise *செய்கிறோம், அனுமதி கொடுங்கள் என்று கேட்டீர்கள். நான் அனுமதித்தேன். நீங்கள்* raise *செய்தீர்கள்; காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர்* raise *செய்தார்கள், திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்* raise *செய்தார்கள். மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொல்லிவிட்டார்கள். அவ்வளவுதான். இதன்மீது மேலும் விவாதம் இல்லை. இது இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும். (குறுக்கீடு) சரி, அதைமட்டும் சொல்வதென்றால், நான் அனுமதிக்கிறேன், சொல்லுங்கள். அதற்கு மேற்கொண்டு நீங்கள் பேசுவீர்களென்றால், நான் உங்களை பேச அனுமதிக்கமாட்டேன். (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவேரி பிரச்சினை குறித்து எடுத்த நடவடிக்கைகளைத் தெரிவித்தார்கள். அது பாராட்டுக்குரியதுதான். நான் கேட்பது ஒன்றே ஒன்று. இந்தப் பிரச்சினை குறித்து. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இதற்கு மேல் ஒன்றும் பேச வேண்டாம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன*

[பேரவைத் தலைவர்] [2016 ஆகஸ்ட் 17

*ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான். திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வாய்ப்புக் கேட்டீர்கள், வாய்ப்புக் கொடுத்தேன். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) அதெல்லாம் இல்லை. தகவல் கோரல் என்கிற முறையில் அவ்வளவுதான் அதற்கு அனுமதி வழங்கப்படும். அதற்குமேலே நீங்கள் விவாதம் எல்லாம் செய்யமுடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் அனுமதியில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. மைதீன்கான், நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்)*

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** *நான் பேசுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. அதற்குமேலே நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள், உட்காருங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) அதற்குமேல், அதன்மீது விவாதம் ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன் என்று சொன்னீர்கள். (குறுக்கீடுகள்) அதைத்தான் நீங்கள் முதலிலே சொல்லிவிட்டீர்களே? (குறுக்கீடுகள்) நீங்கள், அதை முதலிலே சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. நீங்கள் ஏற்கெனவே பேசியதிலேயே அது பதிவாகி இருக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் அதைப்பற்றிப் பேசி, அது* record–ல்

2016 ஆகஸ்ட் 17] [பேரவைத் தலைவர்]

*இருக்கிறது. திரும்பவும் அதைப்பற்றி ஏன் பேசவேண்டும்? (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. இது என்ன முறை? (குறுக்கீடுகள்) இதில் ஏதாவது முறை இருக்கிறதா? (குறுக்கீடுகள்) நீங்கள் வாய்ப்புக் கேட்டீர்கள். நான் எவ்வளவு ஜனரஞ்சகமாக, உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். (குறுக்கீடுகள்) நீங்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பு, நேற்று கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அதற்குக்கூட பதில் சொல்லாமல், நீங்கள், 'நாங்கள்* raise *செய்கிறோம் என்று சொன்னீர்கள்; வாய்ப்புக் கொடுங்கள்' என்று கேட்டீர்கள். நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். நீங்கள் அதுகுறித்து பதிவு செய்துவிட்டீர்கள்.* Record *செய்ததையே திரும்பவும் வந்து* record *செய்வதற்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்டால், அதில் என்ன முறை இருக்கிறது? (குறுக்கீடுகள்) அது என்ன முறை என்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து, நீங்கள் உட்காருங்கள். எனக்கு, இன்றைக்கு நிறைய அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு நிறைய வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். நிறைய வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) தயவு செய்து, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. மைதீன்கான் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அதற்குமேலே நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்? (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. அப்படியென்றால், நான் உங்களைப் பேச அனுமதித்தது தவறு என்று சொல்கிறீர்களா? நான் உங்களைப் பேச அனுமதித்தது தவறா? (குறுக்கீடுகள்) உங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தது தவறா? (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. எவ்வளவு வாய்ப்புக் கொடுப்பது? தகவல் கோரல் என்ற முறையில் ஓரளவுக்குத்தான் அதன்மீது பேசவேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் விவாதம் செய்வதற்கெல்லாம் உங்களுக்கு அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) தயவு செய்து நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11–05*

*மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதாவது, காலையிலேயே உங்கள் கொறடா என்னுடைய அறையில் வந்து (குறுக்கீடுகள்) சரிதான், நான் சொல்கிறேன்.* Allow *செய்தேன் என்று சொல்கிறேன்.* Allow *செய்தது தவறா? (குறுக்கீடுகள்)* Allow *செய்தது தவறா? (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கோஷமிட்டுக்கொண்டே இருந்தனர்.)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

அதாவது, கவன ஈர்ப்பு அறிவிப்பு, நேற்றைக்குக் காலையில் கொடுத்தார்கள். நான் அரசினுடைய பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்கிறேன் என்று தி.மு.க. கொறடாவிடம் தெளிவாகத் தெரிவித்தேன். ஆனாலும், தி.மு.க. கொறடா, என்னிடத்திலே என்ன கேட்டார் என்று சொன்னால், இல்லை, தகவல் கோரல் என்கிற முறையிலே Zero Hour–ல் நாங்கள் அதை raise செய்கிறோம். அதை raise செய்வதற்கு எங்களுக்கு அனுமதி கொடுங்கள். மாண்புமிகு அமைச்சரிடம் ஏதாவது பதில் இருந்தால், சொல்லட்டும் என்று என்னிடத்திலே தெரிவித்ததனுடைய அடிப்படையிலேதான், அவர்கள் கொடுத்த அந்த கவன ஈர்ப்பைக்கூட எடுத்துக்கொள்ளாமல், தகவல் கோரல் என்ற முறையிலே அவர்களுக்கு நான் அனுமதியை வழங்கினேன். ஆனால், அதற்கான அனுமதியை இன்றைக்கு அவர்களுக்குக் கொடுத்ததற்குப் பின்னரும், அவர்கள் கேட்ட விளக்கத்திற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தெளிவான பதிலைத் தெரிவித்துவிட்டார்கள். அவ்வாறு தெளிவான பதிலைத் தெரிவித்த பின்னரும் இவ்வாறு நடந்து கொள்வது முறையற்ற செயல். அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

*முற்பகல் 11–10*

## 3. கவன ஈர்ப்பு

### பாளையங்கோட்டை தொகுதி, மேலப்பாளையம், பாளையங்கால்வாயைப் புனரமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.